# திராவிடத்தால் வாழ்கிறோம்

1114

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

51

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



## பேரறிஞர் அண்ணா அமைத்த அடித்தளம்!

திரைப்படங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்பது எப்போதும் விவாதத்திற்குரியது. பொழுதுபோக்கு திரைப்படங்கள் இவற்றில் இருந்து விலக்கானவை என்றாலும், ஏதாவது ஒரு கருத்தை முன்வைக்கும் படமாக இருந்தால், அதில் வைக்கப்படும் கருத்து எத்தகையது? அந்தக் கருத்தின் விளைவுகள் என்ன? முதலில் அது கருத்தா அல்லது வெறுப்புப் பிரச்சாரமா என்பதைக் கவனிக்க வேண்டிய தேவை சமீப காலங்களில் உருவாகியிருக்கிறது.

குறிப்பாக, கடந்த சில ஆண்டுகளில் வெளியான சில திரைப்படங்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்' மற்றும் 'தி கேரளா ஸ்டோரி' போன்ற படங்கள் வெளியான பிறகு, அவை இஸ்லாமிய சமூகத்திற்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டுவதாக இருந்தன. இப்படங்களில் காட்டப்படும் எதிர்மறை கதாபாத்திரங்கள், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால், அந்த மதம் சார்ந்த அனைவருமே அத்தகையவர்கள்தான் என்ற ஒரு பொதுவான பிம்பத்தை இது உருவாக்கியது.

குறிப்பாக, விவேக் அக்னிஹோத்ரி இயக்கிய 'காஷ்மீர் பைல்ஸ்' திரைப்படம், 2022-ஆம் ஆண்டு வெளியானது. இஸ்லாமியர்களால் காஷ்மீரில் இருந்து பண்டிட்கள் அடித்து வெளியேற்றப்பட்டதாக வெறுப்பை உமிழ்ந்தது. அந்தச் சம்பவத்தின் ஒரு பகுதியை மட்டும் தீவிரமாகச் சித்திரிப்பதன் மூலம், இஸ்லாமியர்கள் அனைவருமே அந்த வன்முறைக்குக் காரணமானவர்கள் என்பது போன்ற ஒரு தோற்றத்தை இது உருவாக்கியது.

அதே போல, கேரளாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் மதம் மாற்றப்பட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் சேர்க்கப்படுவதாக, அதே விவேக் அக்னிஹோத்ரி 'தி கேரளா ஸ்டோரி' என்ற படத்தை உருவாக்கினார். பின்னர், அது மூன்று பேர் எனத் திருத்தப்பட்டது. இது சாதாரண தரவுப் பிழையாகக் கடந்துவிட முடியாது. மதமாற்றம் குறித்த தேவையற்ற அச்சத்தையும், இஸ்லாமிய இளைஞர்கள் மீதான வெறுப்பையும் சமூகத்தில் அதிகரிக்கச் செய்வதற்காகத் திட்டமிட்டு இத்திரைப்படம் சதி வலைகளைப் பின்னியது.

இந்த இரண்டு படங்கள் மட்டுமல்ல, இதே வரிசையில் விவேக் அக்னிஹோத்ரி இயக்கிய மூன்றாவது படம், 'தி பெங்கால் ஃபைல்ஸ்'. இது வங்காள வரலாற்றில் நடந்த வன்முறைகளை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் சித்திரித்து, வகுப்புவாத மோதல்களைத் தூண்டும்வண்ணம் இருந்தது.

இத்தகைய திரைப்படங்கள் மட்டுமல்ல வெப் சீரீஸ்கள், வரலாற்றுத் திரிபுவாத புத்தகங்கள் என பா.ஜ.க. ஆட்சியின் கடந்த 12 ஆண்டுகளில் கலைப்படைப்புகளின் ஊடாக இஸ்லாமிய சமூகத்துக்கு எதிராக விதைக்கப்பட்ட வெறுப்புணர்வு கொஞ்சநஞ்சமல்ல. இவற்றால் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கமும் கொஞ்சநஞ்சமல்ல. தி காஷ்மீர் ஃபைல்ஸ் வெளியான பல திரையரங்குகளில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளும், வன்முறையைத் தூண்டும் முழக்கங்களும் எழுப்பப்பட்ட வீடியோக்கள் வைரலாயின. அந்த ஆண்டு ராம நவமி ஊர்வலங்களின்போது ஏற்பட்ட வன்முறைகளில், இந்தப் படம் ஒரு கருவியாகச் செயல்பட்டது என ஊடக அறிக்கைகள் அதிர்ச்சியூட்டின.

2023-இல் தி கேரளா ஸ்டோரி திரைப்படம் குறித்த சமூக ஊடகப் பதிவு ஒன்றுக்காக மகாராஷ்டிர மாநிலம் அகோலாவில் பெரும் வன்முறை வெடித்து, ஒருவர் கொல்லப்பட்டார். 8 பேர் காயமடைந்தனர். வாகனங்கள் மற்றும் வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, அகோலாவில் ஊரடங்கு மற்றும் இணைய முடக்கம் செய்யப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. பொதுப்புத்தியில் சிறுபான்மையினரை எதிரிகளாகப் பாவித்து, ஆர்.எஸ்.எஸ். பேசும் பெரும்பான்மைவாதத்திற்கு வலுசேர்க்கும் முயற்சிகளில் இத்தகைய கலைப்படைப்புகள் பெரு வெற்றி கண்டன என்றே சொல்லலாம்.

ஆனால், இத்தகைய படைப்புகள் எவையுமே எந்தத் தாக்கத்தையும் செலுத்தாமல், இஸ்லாமியர்களுக்கு எதிரான சச்சரவும் இல்லாமல், சலனமில்லாமல் கடந்துசென்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். இங்கும் சிறுபான்மையினரைத் தீவிரவாதிகள், பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கும் திரைப்படங்கள் 1990-களுக்குப் பிறகு வெளிவந்திருந்தாலும், அவை பொழுதுபோக்குப் படம் என்கிற வரையறைக்குள்ளேயே நின்றன. மக்கள் அவற்றை சார்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம், கலையின் ஊடாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சமூக நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் விதைத்த மண் தமிழ்நாடு. விதைத்த இயக்கம் திராவிட இயக்கம்.

### அண்ணா உருவாக்கிய பாதை

குறிப்பாக, திராவிட இயக்கத்தின் கருத்தியல் அடித்தளத்தில் கலைத்துறைக்குப் பாதை அமைத்த பேரறிஞர் அண்ணாவின் படைப்புகளில் இருந்தே இதைத் தொடங்க முடியும். அவரது படைப்புகள் பலவும் இஸ்லாமியர்களை வெறும் 'சிறுபான்மையினராக' மட்டும் பார்க்காமல், 'தமிழ் அடையாளத்தின் பிரிக்க முடியாத அங்கமாக' மற்றும் சமூக சீர்திருத்தக் கூட்டாளிகளாகவே சித்திரித்தது.

> அண்ணாவின் மிக முக்கியமான 'சிவாஜி கண்ட இந்துராஜ்ஜியம்' நாடகத்தில், சத்ரபதி சிவாஜிக்கும் ஒரு இஸ்லாமிய வீரருக்கும் இடையிலான உறவு மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டிருக்கும்.

அண்ணா, தனது நாடகங்களில் உருவ வழிபாட்டையும் மூடநம்பிக்கைகளையும் சாடினார். இதற்கு நேர்மாறாக, இஸ்லாமியத்தின் 'ஏகத்துவ' (ஒரு கடவுள் கொள்கை) கொள்கையைத் திராவிட இயக்கத்தின் 'ஒன்றே குலம்' கொள்கையோடு ஒப்பிட்டுப் பேசினார். அவரது நாடகங்களில் வரும் இஸ்லாமியக் கதாபாத்திரங்கள், பகுத்தறிவு பேசுபவர்களாகவும் போலிச் சடங்குகளை எதிர்ப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

அண்ணாவின் மிக முக்கியமான 'சிவாஜி கண்ட இந்துராஜ்ஜியம்' நாடகத்தில், சத்ரபதி சிவாஜிக்கும் ஒரு இஸ்லாமிய வீரருக்கும் இடையிலான உறவு மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டிருக்கும். இதில் நூர் கான் என்ற தளபதி கதாபாத்திரம் வரும். சிவாஜியின் முடிசூட்டு விழாவைத் தடுக்க முயலும் வைதீகர்களுக்கு எதிராக, சிவாஜியின் விசுவாசமான தளபதியாக இருக்கும் நூர் கான், நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகப் பேசுவார். நிலப்பிரபுத்துவ காலத்தின் சாதியப் பாகுபாடுகளைக் கடந்து, ஒரு இஸ்லாமியர் நாட்டின் நலனுக்காக எப்படி உண்மையாக இருக்க முடியும் என்பதை, அண்ணா இதிலும் ஆழமாகப் பதிவு செய்திருப்பார். ஏழை, எளிய மக்களின் பொது எதிரி 'மதம்' அல்ல. மாறாக, 'நிலப்பிரபுத்துவமும்' 'சாதிய ஏற்றத்தாழ்வுகளுமே' என்பதை இக்காட்சிகள் ஆணித்தரமாக எடுத்துரைத்தன.

'சந்திரோதயம்' நாடகத்தில், ஒரு ஜமீன்தார் அல்லது நிலப்பிரபுவின் அதிகார மமதையையும் அவர் எளிய மக்களை நடத்தும் விதத்தையும் அண்ணா கடுமையாகச் சாடியிருப்பார். இதில் வரும் ஒரு இஸ்லாமியக் கதாபாத்திரம், அந்த நிலப்பிரபுவின் அநீதியான கட்டளைகளுக்குப் பணிய மறுப்பதோடு, பாதிக்கப்பட்ட எளிய மக்களுக்காக (குறிப்பாகப் பட்டியலின மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக) வாதாடும் ஒரு 'நீதியின் குரலாக' அண்ணாவால் படைக்கப்பட்டிருக்கும். 'மதம் மனிதனைப் பிரிக்கக் கூடாது, மனிதநேயமே அனைத்திற்கும் மேலானது' என்ற கருத்தை அந்த இஸ்லாமியக் கதாபாத்திரம் வலியுறுத்தும்.

நாடகத்தில் (பின்னாளில் திரைப்படமாகவும் வந்தது), நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தையும் மதச் சடங்குகளையும் அண்ணா விமர்சித்திருப்பார். நேரடியாக ஒரு இஸ்லாமியக் கதாபாத்திரம் போராட்டக் களத்தில் இல்லாவிட்டாலும், 'சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரும் மதங்களைக் கடந்து ஒன்றுபட வேண்டும்' என்ற கருத்தை அண்ணா இதில் விதைத்திருப்பார். இதில் வரும் 'மணி' கதாபாத்திரம் பேசும் பல வசனங்கள் இஸ்லாமியச் சகோதரத்துவத்தையும் உள்ளடக்கியதாகவே இருக்கும்.

'நாம் அனைவரும் ஒரே இனத்தவர் (தமிழர்கள்), பின்பற்றும் மார்க்கம் மட்டுமே வேறானது' என்கிற கருத்தை, அவரது நாடக வசனங்கள் உரக்கப் பேசின.

...நீளும்

## நடிகரின் பழைமைவாதமும் பெரியாரின் தேவையும்...

பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர், நடிகர் கேசரி லால் யாதவ். போஜ்பூரி மொழி திரைப்படங்களின் முக்கிய நடிகரான இவரது சமீபத்திய செயல், பழைமைவாதத்தின் எச்சம் எனச் சமூக வலைதளங்களில் பெரும் விமர்சனத்தைக் கண்டுள்ளது.

கேசரி லால் கலந்துகொண்ட ஒரு பொது நிகழ்ச்சியில், மேடைக்கு வந்த ஒரு சிறுவன், அவரது கால்களைத் தொட்டு வாழ்த்து பெற முயன்றபோது, அதைத் தடுத்த அந்த நடிகர், 'நீ பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவன், நீ வணங்கக் கூடாது. நாங்கள்தான் உன்னை வணங்க வேண்டும்' எனக்கூறி அந்தச் சிறுவனின் கால்களைத் தொட்டு அவர் வணங்கி இருக்கிறார். குறிப்பாக, 'அதுதான் நமது மரபு, பண்பாடு' எனவும் கூறியிருக்கிறார். அந்த வீடியோ வைரலாகப் பரவி கடும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளது.

மேடையில் சில விநாடிகளில் நடந்த அந்தச் சம்பவம், நூற்றாண்டுக்கால அடிமைத்தனத்தின் எச்சம். பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் நீடித்துவரும் பழைமைவாதத்தின் அடையாளம் எனப் பகிரப்பட்டுவருகிறது. அந்த நிகழ்வு, மரியாதை என்பது பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கும் பிற்போக்குச் சிந்தனைக்கு எதிராக, சாதி அமைப்புக்கு எதிராக, சமூக நீதி சமத்துவச் சிந்தனைகளின் தேவையை உணர்த்துவதாக அமைந்துள்ளது எனக் கருத்துகள் பகிரப்பட்டுவருகின்றன.

'சாதி என்பது சமூக அமைப்பு மட்டுமல்ல; அது மனநிலையும் ஆகும். சட்டம் அதை பலவீனப்படுத்தலாம்; ஆனால் மனித மனத்திலிருந்து அதை அகற்றுவதுதான் உண்மையான விடுதலை' என்றார் அண்ணல் அம்பேத்கர். அந்தப் பயணத்தில் பல படிகளைத் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. வட மாநிலங்களுக்கு அனைத்து வடிவிலும் பெரியார் செல்ல வேண்டும் என்பதையே இந்த நிகழ்வும் தெளிவாக்கியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் தலைமையேற்ற பாசறைக் கூட்டம்!



பி.பாலகிருஷ்ணன்

2001-ஆம் ஆண்டு, பிப்ரவரி 9, 10 தேதிகளில், மதுரை மாவட்டம் அழகர் கோயிலில் இளைஞர் அணி பாசறைக் கூட்டம் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தலைமையேற்று வழிநடத்திய கூட்டத்தில், 'பேரறிஞர் அண்ணா' என்கிற தலைப்பில் 5 நிமிடங்கள் அவர் முன்னால் உரையாற்றி முதல் பரிசு பெற்றேன். எனது உரையில், 'பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், வருங்காலத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் நீங்கள்தான் என்பதை அப்போதே பதிவுசெய்தேன். பாராட்டுப் பரிசினை அவர் கையால் பெற்றதும் மறக்க முடியாத நிகழ்வு. 4-ஆம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர், பகுதி கழக துணைச் செயலாளர், தற்போது காளவாசல் பகுதி கழக நிர்வாகக்குழு உறுப்பினர் என எனது பணி என்றும் கழக உணர்வோடு கலந்துள்ளது.

**– பி.பாலகிருஷ்ணன், காளவாசல் பகுதி நிர்வாகக்குழு உறுப்பினர், மதுரை வடக்கு மாவட்டம்..**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### தொடர் மாநாடுகள்!

1969-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், கழகத் தலைவராகக் கலைஞர் பொறுப்பேற்ற பிறகு, தொடர்ச்சியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கழக மாநாடுகள் நடைபெற்றன. 1970-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் நடைபெற்ற திருச்சி மாவட்ட ஐந்தாவது மாநாடு தொடங்கி, 1975-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி கோவையில் நடைபெற்ற ஐந்தாவது பொது மாநாடு வரை அனைத்து மாவட்டக் கழகங்களிலும் தொடர்ச்சியாக மாநாடுகள் நடைபெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131